# இலங்கையின் சமூக அரசியல் சிந்தனையில் காந்திய தத்துவத்தின் தாக்கம் 1925 – 1976

செல்வி பிரபாலினி விஸ்திரலிங்கம்

சிறப்புக்கலைமாணி

பதிவிலக்கம் - **M.Phil / H / 2003 /01**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணி பட்டம் (வரலாறு) வழங்கப்படுவதற்காக உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்துக்கூடாக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு -2008

ExM.Phil12
Thesis
Library - EUSL

வரலாற்றுத்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்,

இலங்கை.

PROCESSED
Main Library, EUSL

## ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வுக்குரிய தலைப்பாக "இலங்கையின் சமூக அரசியல் சிந்தனையில் காந்திய தத்துவத்தின் தாக்கம் 1925 – 1976" ( "THE IMPACT OF GANDHIAN PHILOSOPHY ON SOCIAL AND POLITICAL THOUGHT OF SRILANKA 1925 – 1976" ) என்ற தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது காந்திய சிந்தனை பற்றியும், காந்திய சிந்தனை இந்தியாவில் மட்டுமின்றி இலங்கை போன்ற ஏனைய தேசங்களுக்கும் பரவியதன் ஊடாக காந்தியத்தின் அவசியம் உணரப்பட்டமையை அறியமுடிகிறது. ஆனால் வன்முறைக் கலாச்சாரம் பெருகிவரும் இன்றைய காலகட்டத்தில் காந்தியக் கொள்கை புறக்கணிக்கப்படுகிறது. எனவே அஹிம்சைக் கோட்பாடு புறக்கணிக்கப்படுவதன் காரணத்தை இலங்கையை அடிப்படையாகக் கொண்டும், இளம் சந்ததியின மத்தியில் காந்திய சிந்தனை மீளப்புணரமைக்கப்படுவதன் அவசியம் பற்றியும் எடுத்தாராயும் ஓர் வரலாற்றுப் பகுப்பாய்வு அணுகுமுறையாகும்.

இவ்வாய்வுக்கு உட்படுத்தப்படும் காலகட்டம் 1925 – 1976 என வரையறைக்குட்பட்டதாக அமைகின்றது. காந்தியக் கொள்கைகள் இலங்கையின் அரசியல் சமூகரீதியில் ஏற்படுத்திய தாக்கம் என்கின்ற போதும், சிறப்பாக வடக்கு – கிழக்கில் வாழும் தமிழர்களால் காந்திய அடிப்படையில் சாத்வீகப்போராட்ட முன்னெடுக்கப்பட்டது என்ற வகையில் வடக்கு – கிழக்கு பிரதேசத்தையே ஆய்வுக்குரிய பிரதேசங்களாக ஆய்வாளனால் மட்டுப்படுத்தப்படுகின்றது. சிறப்பாக இலங்கைத் தமிழரசுக்கட்சியினரே இப்போராட்டத்தை வழிநடத்தியவர்களாகக் காணப்படுவதன் காரணத்தினால் அக்கட்சியை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய் மேலும் மட்டுப்படுத்தப்படுகின்றது.

எனினும் சமூக ரீதியான தாக்கம் என்ற வகையில் அகில இலங்கை காந்திய சேவா சங்கம், வட இலங்கை சர்வோதயம் போன்ற அமைப்புக்களின் செயற்பாடுகளும் காந்தியக் கொள்கைகளின் அடிப்படையில் நிலைபெற்றவை என்ற வகையில் இங்கு அவை பற்றிய ஆய்வும் இடம்பெறுவது அவசியமாகின்றது.

இவ்வாய்வானது சிறுபான்மைத் தமிழ் மக்களை அடிப்படையாகக் கொண்டதாக விளங்குவதோடு தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் மலையகத் தமிழரும் இலங்கைவாழ் முஸ்லிம் மக்களும் இவ்வாய்வுப் பரப்புக்குள் உள்வாங்கப்படுகின்றனர். ஏனெனில் ஆரம்பகால அஹிம்சைப் போராட்டங்களில் இவர்களது பங்களிப்பு கணிசமான அளவு இடம்பெற்றிருக்கின்றது என்பதனாலாகும்.

எனவே இ.த.அ.கட்சியின் தலைமையில் இடம்பெற்ற இலங்கை சத்தியாக்கிரகப் போராட்டமானது 1956, 1961 ஆம் ஆண்டுகளில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. எனினும் பின்னர் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டங்கள் அவை பற்றிய தீர்மானங்கள் ஆகியவற்றையும் நாம் புறக்கணிக்க முடியாது இ.த.அ.கட்சியானது சத்தியாக்கிரகப் போராட்டத்தையே பிரதான இலக்குகளாகக் கொண்டு பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் இப்போராட்டத்தை மேற்கொண்டமை பற்றியும், அப்போராட்டத்தின் பலம், பலஹீனம் பற்றியும் இப்போராட்டத்திற்கான காரணங்கள் பற்றியும் ஆராயும் ஓர் ஆழ்நிலை ஆய்வாகும்.

இறுதியாக இப்போராட்டத்தின் தோல்விக்கு இனவாத அரசியல் தலைவர்களின் செயற்பாடுகள் எந்தளவிற்கு பங்களிப்பு செய்துள்ளது என்று ஆராய்வதன் ஊடாக இளைஞர்கள் வன்முறை சார்ந்த போராட்டத்தின் பாதைக்கு எவ்வாறு வழிநடத்தப்பட்டார்கள் என்றும், அதனால் நாட்டின் இனப்பிரச்சினையானது இன்று வரை தொடரும் அவலநிலை எவ்வாறு உருவாகியது எனவும் ஆராய்வதன் ஊடாக மீளவும் காந்தியக் கொள்கைகளை இளைஞர் மனதில் ஆழவிதைப்பதன் அவசியத்தையும் அதற்கு அரசினதும், ஏனைய தலைவர்களினதும் கடமையுணர்வின் அவசியத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| பொருளடக்கம் | |
| ஆய்வாளர் உறுதிமொழி | |
| நெறியாளர் சான்றுரை | |
| ஆய்வுச்சுருக்கம் | i - ii |
| பொருளடக்கம் | iii - iv |
| முன்னுரை | v - vi |
| குறுக்கங்கள் | vii |
| அட்டவணைகள் பற்றிய விபரம் | viii |
| பின்னிணைப்பு படங்கள் பற்றிய விபரம் | ix |
| இயல் 1 | |
| 1. அறிமுகம் | 01 - 11 |
| 1.1 இவ்வாய்விற்கு அடிப்படையான காந்தியக் கோட்பாடுகள் | 11 - 28 |
| இயல் 2 | |
| 2. மகாத்மாகாந்தியும் - அஹிம்சைப்போராட்டமும் | |
| காந்தி கால இந்தியா | |
| 2.1 மகாத்மா காந்தியின் வாழ்க்கை | 29 - 33 |
| 2.2. தென்னாபிரிக்க சத்தியாக்கிரகம் | 33 - 38 |
| 2.3 காந்தியும் - இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியும் | 38 - 44 |
| 2.4 இந்திய விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு காலகட்டங்கள் | 44 - 50 |
| 2.5 இந்திய விடுதலைப்போரில் காந்தியடிகளின் பங்கு (1919-1947) | 50 - 57 |
| இயல் 3 | |
| 3. இலங்கையில் அஹிம்சைப் போராட்டம் ஆரம்பிப்பதற்கான பின்னணி | |
| 3.1 பிரித்தானிய காலனித்துவமும் - இலங்கையும் | 58 - 76 |
| 3.2 இலங்கைத் தமிழரின் அரசியல் வளர்ச்சி | 76 - 100 |
| 3.3 சுதந்திரத்திற்கு பிற்பட்டகால இலங்கையில் சிறுபான்மையினர் எதிர்கொண்ட பிரச்சினைகள் | 100 - 123 |
| இயல் 4 | |
| 4. இலங்கையும் - சத்தியாக்கிரகப் போராட்டமும் 1949 – 1961 | 124 - 125 |
| 4.1 தந்தை செல்வநாயகமும் - அஹிம்சைப் போராட்டமும் | 125 - 130 |
| 4.2 தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றச் செயற்பாடுகளும் சத்தியாக்கிரகப் போராட்டமும் | 130 - 144 |
| 4.3 சத்தியாக்கிரகப் போராட்டமும் - பாராளுமன்றப் பொதுத்தேர்தல்களும் 1960 | 144 - 161 |

4.4 தமிழரசுக்கட்சியும் சட்டமறுப்பு போராட்டங்களும் 162 - 177

இயல் 5

5. அஹிம்சை வழியும் நாடாளுமன்ற அரசியலும் 1961 – 1976 178 - 180

5.1 பாராளுமன்ற பொதுத் தேர்தல் 1965 181 - 191

5.2 பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 1970 191 - 201

5.3 சத்தியாக்கிரகப் போராட்டமும் - திருப்புமுனையும் 202 - 204

5.4 சட்ட மறுப்பு போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்கள் 204 - 208

5.5 வட்டுக்கோட்டைத் தீர்மானம் 208 - 215

5.6 சத்தியாக்கிரகப் போராட்டங்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் - ஒரு மதிப்பீடு 216 - 246

இயல் 6

6. காந்தியக் கொள்கைகளும் - இலங்கைத் தமிழ்ச்சமூகமும் 247

6.1 அகில இலங்கைக் காந்திசேவா சங்கம் 248 - 277

6.2 வட இலங்கை சர்வோதயம் 278 - 284

முடிவுரை 286 - 299

உசாத்துணை நூல்கள் 300 - 311

பின்னிணைப்பு 312 - 347